Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 34 இதழ் - 3 மார்ச் - 2021

தனிப்பிரதி
ரூ.10/-



## ஊழியர்கள் கவனத்திற்கு
# வேதாகம சிறப்பு வகுப்பு

கர்த்தருக்குச் சித்தமானால், இம்மாதம்
கடைசி வாரத்தில், ஏற்காடு மலையில்
**எபிரெயர் நிருபம்** பற்றிய சிறப்பு
ஆய்வு வகுப்பு நடைபெற உள்ளது

கலந்து கொள்ள விரும்பும் கர்த்தரின் சபை ஊழியர்கள்
தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்
(குறைந்த எண்ணிக்கையில்தான் அனுமதி உண்டு)

நன்றி - ஆசிரியர்

தொடர்புக்கு : 98427 30382 / 63818 20299

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பட்சபாதமுள்ளவரல்ல | 11 |
| பெண்கள் பகுதி | 14 |
| வாலிபர் பகுதி | 18 |
| சிறுவர் பகுதி | 21 |
| கட்டுகளில் மட்டற்ற மகிழ்ச்சி... | 23 |
| கர்த்தருடைய நாமம்.... | 27 |
| பிசாசுக்கு எதிர்த்து நில்லு... | 31 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**

**Editor / Publisher**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 34 March- 2021 Issue - 3**


ஆசிரியர் உரை

## நாங்களோ சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்

எல்லாச் சிறப்பையும் தன்னுள் தாங்கி, காலங்காலமாகச் செழித்து வாழ்ந்து, செம்மொழி என்ற சிறப்புத் தகுதியோடு செருக்கு நடைபோட்டு வரும் நம் தாய்மொழியாம் தமிழ் மொழியில், நானோ , நாங்களோ மற்றும் அவனோ , அவர்களோ'' போன்ற வார்த்தைகள் எல்லா நேரங்களிலும் பயன்படுத்தப்படும் வார்த்தைகளாக இல்லாமல், கவனமான பரிசீலனைக்குப் பிறகு பயன்படுத்தப்படும் வார்த்தைகளாக உள்ளன. ஆம், ஒரு நபரை வேறொரு நபருடைய குணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தோ அல்லது ஒரு கூட்டத்தை வேறொரு கூட்டத்தின் செயல்பாட்டோடு ஒப்பிட்டுப்பார்த்தோ அல்லது ஒரு அமைப்பை வேறொரு அமைப்பின் திறனோடு ஒப்பிட்டுப் பார்த்தோ தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, ஒருவரிடமிருந்து வேறொருவர் சிறந்து விளங்கும் போது அல்லது ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று வேறுபட்டுத் திகழும்போது அல்லது ஒன்றிடமிருந்து மற்றொன்று உயர்ந்து நிற்கும் போது, அதை உன்னிப்பாகக் கவனிக்கும் சம்பந்தப்பட்டவர்களால் இவ்வார்த்தைகள் தாராளமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இச்சிறப்பு வார்த்தைகளில் ஒன்றாகிய நாங்களோ என் பதைத்தான், முதல் நூற்றாண்டில் மெய்க்கிறிஸ்தவத்தின் உபதே சத்தை உயிராகவும் மூச்சாகவும் கொண்டு, அன்றைய உலகமெல் லாம் சுமந்து திரிந்த, ஒப்பாரும் மிக்காருமற்ற கிறிஸ்துவின் ஊழி யக்காரனான பவுலடியார், நாங்களோ சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலா யும், கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார் . (1 கொரி.

1:23) என்று கூறியுள்ளார். இவ் வார்த்தையைப் பவுலடியார் பயன்படுத்தினார் என்று சொல்வதை விட, அப்படிப் பயன்படுத்த ஆவியானவர் அவரை ஏவினார் என்று சொல்வது தான் சரியாக இருக்கும். அப்படித்தானே? சரி, இவ்வார்த்தையைப் பயன்படுத்துவதற்கான அவசியம் பவுலடியாருக்கு ஏன் வந்தது என்பதைத் தெரிந்துகொள்ள, நமது வழக்கத்தின்படியாக, இதன் பின்னணிக்குள் இப்பொழுது நமது சிந்தையைச் செலுத்துவோம்.

பண்டைய கிரேக்கத்தின் முக்கியப் பட்டணமாகத் திகழ்ந்தது தான் கொரிந்து. அந்நாட்களில் இது ஓர் உலகளாவிய வியாபார கேந்திரம். இப்படிச் சொல்வது இப்பட்டணத்திற்குப் பெருமை சேர்ப்பதாக இருந்தாலும், இப்பட்டணத்தின் சிறுமைக்கான காரணங்களும் இல்லாமலில்லை. இப்படிப் பெருமையும், சிறுமை யும் சேர்ந்திருந்த இப்பட்டணத்தில், பவுலடியார் தன்னுடைய இரண்டாம் நற்செய்திப் பயணத்தில் கால் பதித்து, கிறிஸ்துவின் நற்செய்தியை நறுக்குத் தெறித்தாற் போல் எடுத்துச் சொல்லி, கிறிஸ்துவின் சபையை ஏற்படுத்தினார் (அப். 18:1–17) இந்தச் சபையாருக்குப் பவுலடியார் ஆவியின் ஏவுதலால் இரண்டு நிருபங்களை இரண்டு வித்தியாசமான காரணங்களுக்காக எழுதினார். அவற்றுள், முதல் நிருபத்திற்கென்று இரண்டு நோக்கங்கள் அவருக்கு இருந்ததாக நாம் கூறமுடியும். 1. கொரிந்து சபையாரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு கூறுதல் 2. ஒழுக்கச் சீரழிவு நிறைந்த சமுதாயத்தின் மத்தியில் விசு வாசிகள் தங்களைக் காத்துக்கொள்ள உதவுதல். இந்நிருபத்தைப் பவுலடியார், தன்னுடைய மூன்றாம் நற்செய்திப் பயணத்தின் போது, எபேசுவில் தங்கியிருந்த காலத்தின் (அப். 19,9,10) இறுதி நாட்களில் எழுதியுள்ளார்.

இப்படி, கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபத்தின் முதல் அதிகாரத்தை இரண்டு பகுதிகளாக நாம் பிரிக்கலாம். அதில், இரண்டாம் பகுதி, கிறிஸ்துவின் சிலுவை பற்றியும், அந்தச் சிலுவைக்கான வித்தியாசப்பட்ட பார்வை பற்றியும் பேசுகிறது (1:18–31). இப்பகுதியினூடே வருவது தான் நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் வசனப்பகுதி. இவ்வசனத்தில் பவுலடியார், தானும், தன்னோடிருப்பவர்களும் சிலுவைக்காகக் கொண்டிருக் கும் பார்வைக்கும், மற்றவர்களுடைய பார்வைக்கும் வேறுபாடு உள்ளதென்பதைத்தான் **நாங்களோ** என்ற வார்த்தையின் மூலம் பளிச்சென வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, சிலுவைக்கான தன்னுடைய பார்வையைப் பிறருடைய பார்வையோடு ஒப் பிட்டுப் பேசியுள்ளார். அப்படியானால், யாரோடு இப்படி ஒப்பிட்டுப் பேசியுள்ளார்?.

அவர்கள் வேறு யாருமல்ல, அவருடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவத்தின் எதிரிகளான யூதர்களும், அறிவுப் பித்தர்களான கிரேக்கர்களும் தான். இந்த யூதர்கள் மோசேயின் பிரமாணத்தின் படியான பக்தி வாழ்க்கையை நடத்தியவர்கள். ஆனால், மோசே யின் பிரமாணப் போதனைகளுக்கு முழுமையாகச் செவி கொடுக் காமல், எதற்கெடுத்தாலும் **அடையாளம் கேட்டு நச்சரித்தவர்கள்** [மத். 12:38; 16:1; மாற்கு 8:11,2; 4:48] கிரேக்கர்களோ தத்து வார்த்த ரீதியிலான **உலக ஞானத்தில் பைத்தியங் கொண்டு அலைந்தவர்கள்.** ஆனால், யூதர்களின் பக்தியோ, கிரேக்கர்களின் ஞானமோ கிறிஸ்துவின் சிலுவை பற்றிய சிறப்பையும், அதின் மேன்மையையும், அது தரும் நன்மைகளையும் உணர்ந்து கொள்ளுவதற்கும், அறிந்து கொள்வதற்கும் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. அப்படியானால், இவர்கள் கொண்டிருந்த பக்தியினாலும், பெற்றிருந்த அறிவினாலும் என்ன பயன்?

ஆனால், நாம் வாழும் இந்நாட்களில் கிறிஸ்துவின் சிலு வைக்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது? சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துதான் எல்லாப் பிரசங்கிகளா லும், எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் பிரசங்கிக்கப் படுகிறாரா? சொல்லுங்கள். கிறிஸ்துவின் சிலுவையை இன்றைய கிறிஸ்தவம் முறை வைத்தல்லவா பிரசங்கிக்கிறது. அதாவது, வருடத்தின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் கிறிஸ்து வின் சிலுவை நினைக்கப்பட வேண்டும் மற்ற சமயங்களில் அது நினைப்பதற்கும், பேசப்படுவதற்கும் லாயக்கற்றது என்பது போல. அதனால் தானே, வருடத்தின் சில மாதங்களில் பெத்லகேமில் பிறந்த இயேசு பற்றிய சத்தம் கேட்கும். பிற மாதங்களில் அற்புதங் களைச் செய்த இயேசு மற்றும் ஆசீர்வாதங்களை வாரி வழங்கும் இயேசு பற்றிய பேச்சு வலம் வரும். பிறகு வருடத்தின், இந்த மாதங்களில், பெத்தலையில் பிறந்து, நாசரேத்தில் வளர்ந்த இயேசுவும், நன்மை செய்கிறவராகச் சுற்றிந்திரிந்து, அற்புதங்கள் செய்த இயேசுவும் லாவகமாக ஓதுக்கப்பட்டு, கொல்கொதா மலையை பார்வைத் திரும்பும் நோக்கி இதுதானே நடந்து கொண்டிருக்கிறது!.

இயேசுவானர், தமது பிரதான கட்டளையில், .... உலக மெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கி யுங்கள் என்றார் [மாற். 16:15]. இங்கே சுவிசேஷம் என்ற வார்த் தைக்கான பொருள் என்ன தெரியுமா?. இதற்கான விளக்கம் 1கொரி. 15:1-4 வசனங்களில் உள்ளது. அதாவது, கிறிஸ்துவின்

மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய இம் மூன்றும் தான் சுவிசேஷம் என்று இவ்வசனங்கள் தெளிவாகச் சொல்லுகிறது. இரட்சிப்பை அருளும் சுவிசேஷத்தில், கிறிஸ்துவின் பிறப்பும், அற்புதங்களும் அடங்கவில்லை என்பது இப்பொழுது உங்களுக்குப் புரிகிறதா? இல்லையா? ஆகவேதான், அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சிலுவையைச் செல்லுமிடமெங்கும் எடுத்துச் சென்று அதை அப்படியே தூக்கிப் பிடித்தனர். அப்போஸ்தலர்கள் ஒருபோதும் கிறிஸ்துவை முறை வைத்துப் பிரசங்கிக்கவில்லை . மாறாக, எங்கும், எல்லாச் சமயத்திலும் கிறிஸ்துவின் சிலுவையை முக்கியப்படுத்தியே பிரசங்கித்தனர்.

சரி, இப்படி ஆவியானவர் பார்வையிலும், அப்போஸ்தலர்கள் பார்வையிலும் முக்கிய இடம் பெற்று, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மனுக்குலத்துக்குத் தொடர்ந்து இரட்சிப்பை நல்கி வரும் கிறிஸ்துவின் சிலுவை நமக்கு எடுத்துச் சொல்லும் வேறு சில பாடங்கள் என்ன என்று கீழே பார்ப்போம்.

1 **கிறிஸ்துவின் சிலுவையும், தேவ ஞானமும்.**

கிறிஸ்துவின் சிலுவை நமக்குக் கற்றுக் கொடுக்கும் அநேக பாடங்களுள் முதல் பாடம், பரலோக தேவனுடைய ஞானம் பற்றியது.

சர்வ வல்ல தேவனுடைய ஞானம் பற்றி முழுமையாக. எடுத்துக் கூற எந்த ஒரு மனிதனும் தகுதியானவனல்ல என்பது சர்ச்சைக்கிடமற்ற தீர்மானமான கருத்து. ஏனெனில், மனிதனுடைய மிஞ்சின ஞானம் தேவனுக்கு முன்பாகப் பயித்தியமாயிருக்கிறது (1கொரி. 1:20). உண்மை நிலை இப்படியாக இருந்தாலும், ஆவியானவர் தேவ ஞானம் பற்றி நாம் கொஞ்சமாகிலும் விளங்கிக் கொள்ளும்படியான சில கருத்துக்களை வேதாகமத்தின் பக்கங்களில் வெளிப்படுத்தியே கொடுத்துள்ளார். யோபு புத்தகத்தில் அவர் பூரண ஞானமுள்ளவர் என்று தெரிந்து கொள்ள முடியும் (யோபு 37:16). ஏசாயா தீர்க்கனை கொண்டு ஆவியானவர், பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது? (ஏசாயா 40:28) என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இப்படிப் பூரணமும், ஆராய்ந்து முடியாததுமான தேவ ஞானத்தை வெளிப்படுத்தும் வழிகளில் ஒன்றாக கிறிஸ்துவின் சிலுவை உள்ளது. எப்படியெனில், 1கொரி 2:20-ல் இயேசு

கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித் திருந்தேன் என்று சொல்லும் பவுலடியார் தொடர்ந்து கூறும் போது, அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையு மல்ல, உலக தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம் என்று கூறுகிறார் (1கொரி 2:2–7). இப்பகுதியானது தேவ ஞானத்திற்கும் கிறிஸ்து வின் சிலுவைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குமான பந்தத்தை நமக்கு எடுத்து விளக்குகிறது.

இன்னும் இதே பவுலடியார், எபேசு பட்டணத்து கிறிஸ்த வர்களுக்கு எழுதும் போது, தேவ ஞானத்தோடு கிறிஸ்துவின் சபையைத் தொடர்புபடுத்துவதையும் நாம் காணலாம்..... உன் னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவ ருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாக இப்பொழுது தெரியவரும் பொருட்டாக... என்று (எபே 3:10). ஆக, சிலு வையின் மூலம் நாம் தேவ ஞானத்தையும், சிலுவைக் கிறிஸ்து கட்டின ஒன்றான மெய்ச் சபையின் மூலம் நாம் தேவ ஞானத் தையும் அறிந்து கொள்ளுகிறோம்.

ஆக, தேவ ஞானம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் சிலு வையையும், சிலுவைக் கிறிஸ்து கட்டின சபையையும் நாம் அற்பமாக எண்ணாமல், சிலுவையின் உபதேசத்துக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, சிலுவைக் கிறிஸ்துவின் சபையில் நாம் அங்க மாக மாறுவோம்.

### II **கிறிஸ்துவின் சிலுவையும், தேவ வல்லமையும்**

கிறிஸ்துவின் சிலுவையிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற அடுத்த பாடம், பரலோக தேவனுடைய வல்லமை பற்றியது.

தேவனுடைய வல்லமை இந்த இடத்திலே தான் இருக்கிற தென்று நாம் சொல்ல முடியாதபடி, அது விண்ணிலும், மண்ணி லும் நீக்கமற நிறைந்து கிடக்கிறது. இந்த உண்மையைத்தான் தாவீது தனது சங்கீதங்களுள் ஒன்றில், வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங். 19:1) என்று எழுதி அவருடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துகிறார். எரேமியா தீர்க்கன் இன்னும் சிறப்பாக, அவர் பூமியைத் தமது வல்லமை யினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தை தமது ஞானத்தினால்

படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார் [எரே 51:15] என்று கூறியுள்ளார். ஆம், தேவனுடைய வல்லமையை நாம் ஏதேன் தோட்டம் தொடங்கி, கிறிஸ்துவின் பிறப்பு [லூக் 1:35], கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் [11கொரி 13:4], சபை ஸ்தாபிதம் [அப். 2]. வருகை பற்றிய விவரிப்பு [1தெச 4:15-17] என்று எங்கும் காணலாம்.

பவுலடியார் கொரிந்தியர் முதலாம் நிருபத்தின் முதல் அதிகாரம் 18-ம் வசனத்தில், சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட் டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது என்று கூறுகிறார். தேவ பெலன் என்பதும், தேவ வல்லமை என்பதும் ஒன்று தான். சிலுவையின் மூலம் நாம் பெற்றிருக்கிற உபதேசமாகிய சுவிசேஷம் தேவ வல்லமையை நமக்கு வெளிப்படுத்துகிறது. மேலும், பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும் போது, கிறிஸ்துவின் சிலுவையை மூலாதாரமாகக் கொண்டு பெற்ற சுவிசேஷத்தை இப்படியாகக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது என்று. [ரோமர் 1:16] கிறிஸ்துவின் சிலுவையானது மனுக்குலத்துக்கு தேவ வல்லமையை இப்படியாக வெளிப்படுத்தியிருக்கிறது.

அருமையானவர்களே, தேவனுடைய வல்லமையினாலே சிலுவையின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிற சுவிசேஷத்தை நாம் நம்முடைய வாழ்க்கையில் எந்த இடத்தில் வைத் துள்ளோம்? சிலுவையின் சுவிசேஷம் போதிக்கும் இரட்சிப்பை [1 கொரி 1:18] நாம் நம்முடைய வாழ்க்கையில் பெற்று விட்டோமா? சிந்திப்போம். சிலுவையின் சுவிசேஷம் தரும் இரட்சிப்பை புதிய ஏற்பாடு சொல்லும் உபதேசத்தின்படி நாம் பெறாமல், சிலுவைக்கு என்னதான் முக்கியத்துவம் கொடுத்து அதைக் கையிலும், கழுத்திலும், சுவற்றிலும் தொங்கவிட்டுக் கொண்டு, எப்படித்தான் சிலுவை பற்றி முறைவைத்துப் பாடிப்பிரசங்கித்தாலும் நாம் சிலுவைக்குப் பகைஞராகவே தேவனால் பார்க்கப்படுவோம் [பிலி. 3:18] என்பதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம்.

ஆகையால், நாம் சிலுவைக்கும், சிலுவை நமக்கு வெளிப்படுத்தும் தேவ வல்லமைக்கும் எதிரானவர்களாகக் காணப்படாமல், சிலுவையின் உபதேசத்துக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, சிலுவையின் கிறிஸ்துவுக்காக நம்மை ஒப்புக்கொடுத்து வாழ பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக.

III **கிறிஸ்துவின் சிலுவையும், இரத்தத்தின் வல்லமையும்.**

கிறிஸ்துவின் சிலுவையிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தின் வல்லமை பற்றியது.

விஞ்ஞானத்தின் அளப்பரிய சாதனைகள் விண்ணை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் இந்தக் காலத்திலும் ஓர் உண்மையை நாம் ஓங்கி அடித்துச் சொல்ல முடியும். அது, இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்திற்கு நிகரான வல்லமை வேறு எதற்கும் இல்லையென்று. பரிசுத்த ஆவியானவர், இப்பேருண்மையை யோவான் அப்போஸ்தலனுக்கு அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளார். **.....அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்** என்று (1யோவா 1:7). கிறிஸ்துவின் இரத்தத்திற்கான இந்த வல்லமை வேறு எதற்கு உண்டு? அப்படி வேறு எதற்காகிலும் இருந்திருக்குமானால் பிதாவாகிய தேவன் தமது ஒரே பேறான குமாரனை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்திருக்க வேண்டிய அவசியமே இல்லையே!

நம்முடைய பாவங்கள் கழுவப்படும்படியாய் கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தின் சிறப்பு குறித்து பரிசுத்த ஆவியானவர் எப்படியெல்லாம் எடுத்துக் கூறுகிறார் என்று பாருங்கள். அது குற்றமில்லாதது (மத். 27:4) மாசற்றது மற்றும் விலையேறப்பெற்றது (1பேது 1:19). சுத்திகரிப்பதற்குப் போதுமானது (எபி 9:14). இறுதியானது (எபி. 9:26) மற்றும் வெற்றி கொள்ளக் கூடியது (வெளி. 12:11). இன்னும், இந்த இரத்தத்தின் மேன்மையை ஆவியானவரின் ஏவுதலால் பவுலடியார் கொலோசெ பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எடுத்துச் சொல்லும் நேர்த்தியைக் கொஞ்சம் பாருங்களேன். **அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கி கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று** (கொலோ 1:16) என்று.

ஆம், பாவத்தின் பயங்கரத்தினாலே தேவனிடமிருந்து பிரிந்து போன (ஏசாயா 59:1,2) மனிதனைப் பாவத்திலிருந்து கழுவி மறுபடியும் தேவனோடு ஒப்புரவாக்கும் செயலைச் செய்கிறது. அந்த இரத்தமானது, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வலி,

வேதனைகளுக்கு மத்தியில் சிலுவையில் சிந்தப்பட்டது. இப்படி சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தம் தான் மனிதனுக்கு தேவனோடிருந்த பகையைக் கொன்று [எபே 2:16] அவனுக்குச் சமாதானத்தைப் பெற்றுத் தந்தது. அப்படியானால், அன்பான வர்களே, நாம் ஒவ்வொருவரும் தேவனோடு சமாதானமாகி விட்டோமா? இயேசுவானவர் பாடுகளையும், அவமானத்தையும் சகித்துக் கொண்டு சிலுவையில் இரத்தம் சிந்தினதற்கான நோக்கம் நாம் தேவனோடு சமாதானமாக வேண்டுமென்பது தான். மற்றபடி, வருடத்தின் சில மாதங்களில் நாம் அவரை நினைத்து, அவருடைய பாடுகளைப் பெரிதாகப் பேச வேண்டு மென்பதற்காக அல்ல.

தேவனோடு சமாதானமாவதற்கு நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அது எப்படி என்கிறீர்களா? கொஞ்சம் கவனமாக கவனியுங்கள். மத் 26:28-ம் வசனம் இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம் என்று கூறுகிறது. அப். 2:38;22:16 ஆகிய வசனங்கள், ஞானஸ்நானத்தினாலே பாவமன்னிப்பு என்று கூறுகிறது. அப்ப டியானால், ஒருவன் சிலுவையின் உபதேசப்படி ஞானஸ்நானம் பெறும் போது, கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்ப டுத்துகிறான் என்பது தெளிவாகிறது. அந்த இரத்தம் தான் ஒருவனுடைய பாவங்களைக் கழுவுகிறது. கிறிஸ்துவின் புதிய ஏற் பாட்டு உபதேசத்திற்கு நாம் முழுமையாகக் கீழ்ப்படியாமல், அதாவது, விசுவாசித்து [மாற் 16:16], மனந்திரும்பி [அப். 2: 38]. இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு [ரோம 10:9,10], பிறகு பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறாவிட்டால் [அப். 22:16] நாம் எத்தனை முறை தண்ணீரில் முழுகி எழுந்திருந்தாலும் அதினால் பிரயோஜனம் ஒன்று மில்லை. நாம் இன்னும் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளாதவர்களாகவே இருப்போம். இதில் குழப்பம் வேண்டாம். கிறிஸ்துவின் உபதேசம் இப்படித்தான் சொல்லுகிறது.

ஆகையால், அருமையானவர்களே, இங்கே கிறஸ்துவின் சிலுவை நமக்குக் கற்றுக் கொடுக்கும் இந்தப் பாடங்களை நாம் அப்படியே மனதில் ஏற்று, வருடத்தின் ஒரு சீசனுக்கு மாத்திரம் சிலுவைக் கிறிஸ்துவை நினைக்கிறவர்களாக இல்லாமல், எப்பொழுதும் கிறிஸ்துவை நினைத்து, கிறிஸ்துவுக்கும், அவருடைய சிலுவை போதனைகளுக்கும் உண்மையுள்ளவர்களாக நடந்து, கிறிஸ்து கட்டின ஒன்றான மெய்ச் சபையில் அங்கமாகி, பரலோக பாக்கியத்தை உறுதி செய்து கொள்வோம். ஆமென்! ✝

# பட்சபாதமுள்ளவரல்ல

Bro. J.C. **சோட்**

**நா**ம் தொல்லைகள் நிறைந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதினிமித்தம் அன்றாடம் எல்லையில்லா பிரச்சனைகளை எதிர்கொள்கிறோம். இவைகளில் பெரும்பாலானவைகள் மனிதன் சக மனிதர்களோடு ஒற்றுமையாக, சமாதானமாக வாழ இயலாமையால் வந்தவைகள். மனிதன் தேசம் , இனம், நிறம், மதம் போன்றவைகளால் பிரிந்து கிடக்கிறான். அவன் இது போன்ற தடைகளைத் தகர்த்து எறிவதற்குப் பதிலாக அவைகளின் பிடியில் சிக்கிச் சீரழிந்து கொண்டிக்கிறான். இவைகள் அதிகப்படியான போட்டி, அவநம்பிக்கை மற்றும் வெறுப்புக்குத் தான் வழி வகுக்கிறது.

ஆனால், உண்மை என்வென்றால், மனிதன் இப்படிப் பிரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், அப்போஸ்தலனாகிய பவுல் **மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்** என்று அப். 17:26 –ல் சொல்லியிருக்கிறார். இது உங்களுக்கும் எனக்கும் என்ன பொருள்படுகிறது? இதன் பொருள் நாம் யாரைவிடவும் சிறந்தவர்களுமல்ல, அதேபோல், யாரும் நம்மைவிட சிறந்தவர்களல்ல என்பதையே காட்டுகிறது. இனம், நிறம், மதம், மொழி என பல பேதங்கள் இருந்தாலும், அடிப்படையில் எல்லா மனிதர்களும் சரீரப்பிரகாரமாக ஒரேவிதமாகத் தான் இருக்கிறார்கள். ஆகவே, நாமெல்லாரும் சமமாகத்தான் இருக்கிறோம். மொழி, நிறம், சமுதாய அந்தஸ்து மற்றும் பல்வேறு வகையான காரியங்கள் இயற்கையாகவே ஒரு மனிதனை இன்னொரு மனிதனை விட சிறந்தவனாக மாற்றுவதில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

கர்த்தருடைய மற்றுமொரு அப்போஸ்தலன் பேதுருவும், தேவன் பட்ச பாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ, அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்று அப்.10:34, 35–ம் வசனங்களில் சொல்லியிருக்கிறார். இவைகள் மனிதனுக்கான தேவனுடைய

உணர்வுகளை அடையாளப்படுத்துகின்றன. நாம் தொடர்ச்சியாக இப்பாடத்தைப் படிக்கும் போது, மனிதனைப் பிரித்தது தேவனல்ல, மாறாக, மனிதன் தானே தன் பாவச் செயல்கள் மூலமாக தன்னை தேவனிடத்திலிருந்து பிரித்துக் கொண்டான். ஆனாலும், தேவன் தமது உருக்கமான இரக்கங்களால் அவனை தன்னிடமாகச் சேர்த்துக் கொள்ள வாஞ்சையாக இருக்கிறார். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).

அப்போஸ்தலனாகிய பவுல், சுவிசேஷத்தின் வல்லமை பற்றியும், அதினிமித்தமான தன்னுடைய பொறுப்பு பற்றியும் இவ்விதம் சொல்கிறார். சகோதரரே, புறஜாதிகளான மற்றவர் களுக்குள்ளே நான் பலனை அடைந்தது போல உங்களுக் குள்ளும் சில பலனை அடையும்படிக்கு, உங்களிடத்தில் வர பலமுறை யோசனையா யிருந்தேன். ஆயினும் இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்பட்டேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டா வதற்கு அது தேவ பெலனா யிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப் படுகிறது (ரோமர் 1:13-17).

அதன்பின்பு, பவுலடியார் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தவர் களிடம் பேசும்போது இவ்விதம் சொன்னார். நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்று மில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றா யிருக்கிறீர்கள் (கலா. 26-28) என்றார். ஆகவேதான்,

கிறிஸ்தவர்கள் இனவேறுபாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. தேசம் மற்றும் நிறத்தின் அடிப்படையில் அவர்கள் தங்களைப் பிரித்துக் கொள் வதில்லை, மற்றவர்களை விடத் தங்களை அவர்கள் உயர்வானவர்களாக எண்ணுவதில்லை. ஏனென்றால், இவர்கள் எல்லா இடங்களிலுமுள்ள மனிதர்களை நேசிக்க வேண்டுமென்ற கட்டளையை இரட்சகராகிய இயேசு வினிடத்தில் பெற்றிருக்கிறார்கள். இதினிமித்தம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருந்து, எல்லாருடைய நன்மைக் காகவும் இணைந்து செயலாற்றும் செயல்வீரர்களாக இன்றளவும் இருக்கிறார்கள்.

மேலும், தூய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம் ஜாதி முறை களையும் இனவெறிகளையும் முற்றிலும் அகற்றி, மனிதனுடைய சுயமரியாதையை மீட்டுத் தருகிறது. இன்னுமாக, இது எல்லா மனிதர்களும் வாழ்வதற்குத் தேவையானவை களையும், வேலை செய்வதற்கான பெலனையும் சாட்சியாய் வாழ்வதற்கான நெறி முறைகளையும் கொடுத்து எல்லா தேசங்களிலும் மனித இனம் சிறந்தது என்பதை உலகில் உயர்த்திக்காட்டுகிறது.

மேற்சொல்லப்பட்ட காரியங்களைக் குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே சிந்தித்துப் பாருங்கள். தேவன் பட்சபாத முள்ளவரல்ல, தேவன் அப்படிப்பட்ட வராயிருக்கும்போது, மனிதன் மட்டும் ஏன் அப்படி இருக்க வேண்டும்? நாம் மற்றவர்களோடு இணைந்து வாழவும், மற்றவர்களை மதித்து வாழவும் போதிக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால், நாம் ஏகசிந்தையுள்ளவர்களாய் கூடி தேவனை ஆராதிக்கும்போது நாம் இயேசுவானவர் ஜெபித்த ஜெபத்திற்கு சாட்சியாக நிற்க முடியும். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களும் ஒன்றா யிருக்கும்படி நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவான் 17:21,22) என்றார். இயேசு கிறிஸ்துவின் இக்கூற்றுப்படி வாழும் போது, உலகம், நம்மைப் பார்த்து கிறிஸ்தவம் சிறந்தவைகளுக்கான முன் மாதிரியாக மாறிவிட்டது என்று உரக்கச் சொல்லும். ✝

பெண்கள் பகுதி

# தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது எது?

Sis. **ரேச்சல் இராஜநாயகம்**

**எ**ல்லாக் காலத்திலும் மிகவும் சிறந்து விளங்கின பல ஸ்திரீகளில் தெபொராள் ஒருவள். மனைவியாக, தாயாக, தீர்க்கதரிசியாக, நியாயாதிபதியாக, கவிதை எழுதுபவராக, பாடகியாக, போரில் முன் நின்று தலைமையேற்றவளாக இப்படி பல பொறுப்புகளுக்கு மத்தியிலும் தேவனுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு மாபெரும் ஸ்திரீயாக இன்று நமக்கு முன் நிற்கும் இந்த ஸ்திரீயிடம் இப்புதிய வருடத்திலே கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

கானானிய இராஜாவாகிய யாபீன் தொள்ளாயிரம் இருப்பு ரதங் களை வைத்திருந்தான். அவன் இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்கி னான் [நியா. 4:3]. இந்த கால கட்டத்தில்தான், தேவன் தன் மக்களை நியாயம் விசாரிப்பதற் காக தெபொராளைத் தெரிந்து கொண்டார். அவள் எப்பிராயீம் மலைத் தேசமான ராமாவுக்கும், பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற தெபொராளின் பேரீச்சமரத்தின் கீழே குடியிருந்தாள். அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாய விசாரணைக்குப் போவார்கள்.

**தெபொராள் நாட்களின் நிலை :** இஸ்ரவேல் புத்திரர் திரும்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தார்கள். எனவே, தேவன் அவர்களை அவர்கள் பகைவர் கைக்கு விற்றுப் போட்டார் [நியா. 4:1]. நியாயாதிபதிகள் புத்தகத்தின் கருப்பொருளே இதுதான். இவளுக்கு முன் இரண்டு முறையும், இவளுக்குப் பின் மூன்று முறையும் இப்படிச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இஸ்ரவேல் ஜனங்கள் புறஜாதிகளுடன் சேர்ந்து தீமை செய்ய முற்பட்டார்கள். விளைவு வீழ்ச்சி. இஸ்ரவேல் மக்கள் தங்கள் பார்வைக்கு எது சரியோ அதை செய்தார்கள் [17:6;21-25] இவ்வாறு செய்வதின் முடிவு அழிவுதான்.

ஏதாவது ஒன்று செய்யப்பட வேண்டும் : இஸ்ரவேல் மக்கள் தேவனை அறிந்திருந்த காரணத்தினால் தேவன் எப்படியோ தம் நாம மகிமைக்கென்று அவர்களை நினைவுகூருகிறார். பாவம் செய்யும் பொழுது தேவன் அவர்களை பகைவர்களின் கையில்

ஒப்புக் கொடுத்து மனந்திரும்பும்படி ஒரு தருணத்தை ஏற்படுத்து கிறார். தெபொராளின் நாட்களிலும் நிலைமை இப்படித் தான் இருந்தது. ஜனங்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள் (4:3), இவர்களைக் காப்பதற்காக தேவன் தெபொராளை தெரிந்தெடுக் கிறார். ஏன் தெபொராள்? இவ்வளவு அவசரமான, கடினமான வேலையைச் செய்ய இவளுக்கு என்ன தகுதி இருந்தது?

1. இவள் ஞானம் நிறைந்தவளாய் இருந்தாள். ஏனென்றால், ஜனங்கள் அருகிலிருந்தும், தூரத்திலிருந்தும் இவளிடத் திற்கு நியாயத்திற்காக வருவார்கள். ஒவ்வொரு தலைமுறையிலும் இப்பேர்ப்பட்ட ஆரோக்கியமான தீர்ப்பு வழங்கவும், நேர்மையான எண்ணமும், நேரான சிந்தனையுமுள்ள தெபொராக்கள் தேவை.

2. இஸ்ரவேலின் அன்றைய சூழ்நிலையைப் பற்றி பகுத்துப் பார்த்து, அதைப் பற்றிய தெளிவான கருத்தைப் பெற்று, ஏதாவது, ஒன்று செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்தாள். இருபது வருடம் பேரீச்ச மரத்தடியில் உட்கார்ந்து நியாயம் விசாரித்த அவளால் தன்னுடைய அத்துணை பொறுப்புகளிடையேயும், தானாக வீட்டையும் பார்த்துக் கொண்டு, அதே சமயம் மக்களின் நிலை பற்றிய ஒரு அவசரமும் கொண்டவளாய் செயல்பட்டுள்ளாள்.

3. பரலோகத்தின் தேவன் பார்வோனைத் தோற்கடித்ததையும், தன் ஜனங்களை மன்னாவைக் கொண்டு போஷித்ததையும், எரிகோவின் மதில்களை விழத்தள்ளினது போன்ற செயல் களை நினைத்து அந்த தேவன் மீது விசுவாசம் வைத்திருந் தாள். ஆம், தேவன் மீது பாசம் வைத்திருந்தாள். அவளுக்கிருந்த விசுவாசத்தினால் தைரியம் பிறந்தது.

4. தேவன் சொல்லியிருந்த திட்டத்தைப் பின்பற்றி செயல் படுத்துவதற்கு தெபொராளுக்கு தைரியம் இருந்தது. பாராக்கை வர வழைத்து, நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக் கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய் என்றும், நான் யாபீனின் சேனாதி பதியாகிய சிசெராவையும், அவன் ரதங்களையும் அவன் சேனையையும், கீசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்திற்கு வர இழுத்து அவனை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன் என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா என்றாள் (நியா. 4:6;7) பாராக், நீ என்னோடே கூட வந்தால் போவேன். என்னோடே கூட

வராவிட்டால் நான் போகமாட்டேன் என்றான். தெபொராளின் தைரியம், விசுவாசம், பலம் இவைகள் தனக்குத் தேவை என்று பாராக் உணர்ந்திருந் தான். உன்னோடே கூட நிச்சயமாய் வருவேன் என்றாள். தைரியம் என்பது ஒருவரிடமிருந்து பிறருக்கு தொற்றிக் கொள்வதா கையால் தெபொராளிடமிருந்து, பாராக் குக்கும், பிறகு பதினாயிரம் பேருக்கும் தைரியம் வந்தது. எதிரிகள் வெட்கப்படுமளவுக்கு தோற்றுப்போனார்கள். இஸ்ரவேலுக்கு மகிமையான வெற்றி கிட்டியது என்பதை நியா: 5ம் அதிகாரத்தில் தெபொராளின் அழகான பாடல் நமக்கு காட்டுகிறது.

ஜெயம் எப்படி கிடைத்தது? : தேவனோடு சேர்ந்து நாம் வேலை செய்யாவிட்டால் ஒரு போதும் வெற்றி இல்லை. முதலா வது தெபொராள் எழுந்தாள். இது ஏதோ அவளைப் பெருமையாய் எண்ணிப் பேசப்பட்ட ஒன்றல்ல. தேவனுக்கு மகிமை செலுத்தினாள். அதே சமயம் இப்பேர்ப்பட்ட சிலாக்கியம் தனக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து களி கூறுகிறாள். தாழ்மை என்பது செயல்படாமல் சும்மா இருப்பதல்ல. தேவனைச் சார்ந்து, உடனுள்ளவர்களையும் சேர்த்துக் கொண்டு செயல்படுவதாகும்.

ஜனங்கள், தெபொராள், பாராக் அனைவரும் சேர்ந்து தேவன் சொன்னபடி செய்தார்கள். தேவனிடம் பொறுப்பை விட்டு விட்டு சும்மா இராமல், எழுந்து செயல்பட்டார்கள், வெற்றி கிடைத்தது.

நன்மைக்கோ, தீமைக்கோ தனிநபர் எவ்வளவு முக்கியம் என்று பாருங்கள்? ஆயி பட்டணத்தில் இஸ்ரவேலின் தோல்விக்கு ஆகான் காரணமாயிருந்தான். மிரியாமின் பாவம் ஆயிரக்கணக் கானவர் களைத் தாக்கியது.

தன்னை முழுவதுமாக தேவனுக்கு அர்ப்பணித்த தெபொராள் நிமித்தம் ஒரு தனி நபர் தேவனுக்காக வல்லமையாய் எழுந்து செயல்பட முடியும் என்பது நமக்குத் தெரிகிறது. பின்பு தேசம் 40 வருடம் அமைதியாயிருந்தது என்று பார்க்கிறோம் [5:31]

இதை வாசிக்கும் அருமையான சகோதரிகளே! தெபொராள் மூலம் நமக்குத் தைரியமும், விசுவாசமும் கிடைக்கும் என்று நம்புகிறேன். புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் கீழ் வாழும் நாம் இப்படி நியாயதிபதியாகவோ, தீர்க்கதரிசியாகவோ இருக்க வேதம் அனுமதி கொடுக்கவில்லை . ஆனால், பிறரோடு சேர்ந்து செயல்பட தெபொராளின் மனது நமக்குக் கிடைக்கும். விழி, விழி, தொபொராளே விழி, விழி [5:12].

இஸ்ரவேல் முற்றிலும் அழிந்து போகாமலிருக்க, தெபொராள் விழித்து எழ வேண்டிய தாய் இருந்தது. ஆம், மக்கள் ஆத்துமாவில் முற்றிலும் அழிந்து போகாமல் இருக்க நானும், நீங்களும் தேவைப் படுகிறோம். மனப்பூர்வமாய் நாம் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். எந்தக் காரியமாயிருந்தாலும் தீமைக்கு எதிர்த்து நின்றே ஆக வேண்டும். தேவனுக்கடுத்த சரியான காரியங் களாயிருந்தால் நம்மை அப்படியே அர்ப்பணம் செய்து என்ன வானாலும் பரவாயில்லை என்று தேவ னோடு சேர்ந்து நிற்க வேண்டும்.

மேலும், நம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதின் அறிவும் வேண்டும். சத்துருவின் பலம் தெரிந்தால் தான் போராட முடியும். அத்தோடு தேவனுடைய வார்த்தை களின் அறிவும் நமக்கு அவசியம். அப்போது தான் எதிராளியாகிய பிசாசை ஜெயிக்க முடியும்.

நமக்குத் தைரியம் வேண்டும். தேவனோடும், தேவனு டைய வார்த்தைகளோடும் சேர்ந்து வாழ்ந்தால் தான் தைரியம் கிடைக்கும். சோர்ந்து போன இருதயம் நமக்கு வேண்டாம். உண்மைக்காகவும், நீதிக்காகவும் விழித்தெழுந்து வேலை செய்ய இஸ்ரவேலின் தாயாகிய தெபொராளைப் போன்ற சிங்கத்தின் இருதயத்தைப் போன்று பலமான இருதயம் கொண்ட ஸ்திரீகள் தேவனுக்கு தேவை. ✝

# நேரம்

***நேரம் என்பது நித்தியத்தின் இடைவேளை அல்ல, ஏனென்றால் நேரத்திற்கு ஆதியும் அந்தமும் இல்லை. நேரத்தின் கால அளவு நூறுகோடி வருடங்களாக இருந்தாலும் அது முடிவே இல்லாத கரையையுடைய நித்திய கடலில் ஒரு சிறு கூழாங்கல்லாகத்தான் இருக்கும்.***

வாலிபர் பகுதி

# வெளிச்சம் உண்டாகக்கடவது

Dr. **ஏபில் நாயகம்**

இருளின் அதிகாரத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகவும், திட்டமாகவும் இருந்தது. ஏதேன் தோட்டத்திலே தனக்கும், தான் உண்டாக்கின மனிதனுக்கும் இருந்த உறவில் ஏற்பட்ட பிளவு சீர் செய்யப்பட வேண்டும் என்பது தேவனின் பிரதான திட்டமாய் இருந்தது. எனவே, காலம் நிறைவேறின போது தன்னுடைய சொந்த குமாரனை இந்த பூமிக்கு அனுப்பினார். குமாரனாகிய கிறிஸ்து என்ன செய்வார் என்பது ஏற்கனவே தீர்க்கதரிசியாகிய ஏசாயா மூலம் முன்னறிவிக்கப்பட்டது. ஏசாயா 9அதிகாரம் 1,2 வசனங்களை வாசித்தால், ... முந்தின காலத்தைப் போல இருண்டிருப்பதில்லை... என்றும் இருளில் நடக்கின்ற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது என்றும் வாசிக்கிறோம். மத்தேயு 4 ஆம் அதிகாரம் 14 மற்றும் 15 ஆகிய வசனங்களில் அந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை நாம் வாசிக்க முடியும். பாவத்தின் பிடியிலிருந்த இருண்டு போன உலகத்தை மீட்கும் வெளிச்சமாக இயேசு கிறிஸ்து வந்தார். யோவான் 8–ஆம் அதிகாரம் 12ம் வசனத்தில் நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்று இயேசு தாமே சொல்லியிருக்கிறார்.

மத்தேயு 5 ஆம் அதிகாரத்தின் 15 வது வசனத்தை வாசிக்கும் போது, நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் என்று தன்னைப் பின் தொடர்ந்து வந்த ஜனங்களுக்கு சொல்லுகிறார். இந்த வசனத்தின்படி பார்க்கும் போது, அவரை பின்பற்றுகிற நாமும் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறோம். I தெசலோனிக்கேயர் 5ஆம் அதிகாரம் 5 ம் வசனம் இப்படியாக சொல்லுகிறது. **நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள் என்று.** ஆம், கிறிஸ்துவின் ஒன்றான மெய் சத்தியத்தை அறிந்து அதற்கு கீழ்ப்பட்டிருக்கிற ஒவ்வொருவரும் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் இரவுக்கும் இருளுக்கும் உடன்பட்டவர்களல்ல.

எப்பஜ இயேசுவானவர் பாவத்தால் இருண்டிருந்த பூமியின் மீது ஒளியாக சுற்றிவந்த பொழுது இருளிலிருந்தவர்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்களோ, அதுபோல நாமும் நாம் பெற்றுக் கொண்ட ஒளியை உலகத்தார் மத்தியில் பிரகாசிக்கச்செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். மத் 5 ம் அதிகாரம் 16 ம் வசனத்தில் இயேசு இப்படியாக சொல்கிறார். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துபடி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்ககடவது.

பிரியமானவர்களே! இயேவானவர் ஒளி வீச சரீரத்தில் இப்பொழுது நம்மோடு இல்லை. எனவே, இருளின் அதிகாரத்திலுள்ள மக்களை வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாற்றத் தேவையான ஜீவ ஒளியை அவர் நம்மிடம் விட்டுச் சென்றிருக்கிறார். எப்படி இயேசுவானர் பூமியில் இருந்த பொழுது இருளிலிருந்த ஜனங்கள் வெளிச்சத்தைக் கண்டார்களோ அதைப்போல இருளின் அதிகாரத்திலுள்ள இந்த உலகத்தின் மத்தியில் பிரகாசிக்கிற பிள்ளைகளாக நாம் இருக்க வேண்டும். இது நம்மேல் விழுந்த தலையாய கடமையாக இருக்கிறது. இதை நம்மில் எத்தனை பேர் புரிந்திருக்கிறோம்? புரிந்தவர்கள் எத்தனை பேர் உணர்ந்திருக்கிறோம்? உணர்ந்தவர்கள் எத்தனை பேர் பிரகாசித்துக் கொண்டிருக்கிறோம்?

நாம் பிரகாசிக்க வேண்டுமானால், முதலாவது நாம் ஒளியோடு ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். ஒளியாகிய இயேசுவோடு தொடர்பு இல்லாதவர்களால் எப்படி பிரகாசிக்க முடியும்? நாம் ஒளியோடு ஐக்கியப்பட வேண்டுமானல் நம்மில் இருளின் கிரியைகள் காணப்படக் கூடாது. இருளும் ஒளியும் எப்படி ஒன்று சேர இருக்க முடியும்? ஒளியாகிய இயேசுவோடு தொடர்பு வைத்துக் கொண்டு இவ்வுலகத்தில் பிரகாசிக்க வேண்டுமானால் நமக்குள் இருளின் கிரியைகள் இருக்கக் கூடாது. II கொரிந்தியர் 6ஆம் அதிகாரம் 14 ம் வசனத்தில் பவுல் சொல்வதை கவனியுங்கள்; ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கிய மேது. ஆம், பிரியமானவர்களே, இருளின் காரியங்களை செய்து ஒருவராலும் வெளிச்சத்தை பிரதிபலிக்க முடியாது.

மெய்யான ஒளியாகிய கிறிஸ்து, நம் வாழ்வின் மூலம் பிறருக்கு வெளிச்சமாயிருப்பதற்கு நம்மை நாமே அனுமதிக்க வேண்டும். நற்கிரியைகளையும், ஒளியின் கிரியைகளையும் செய்யவும் சிந்திக்கவும் நம் வாழ்வை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

I தெசலோனிக்கேயர் 5:8 ம் வசனத்திலிருந்து நாம் வாசித்தால், நாம் தெளிந்தவர்களாயிருந்து விசுவாசம், அன்பு என்னும் மார்க்க வசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம் என்று சொல்லுகிறது. எனவே, ஜீவ ஒளியை பிரகாசிக்கச் செய்கிற ஒரு வாழ்க்கைக்கு ஒப்புக் கொடுத்தல் அவசியமாகும்.

வாலிபர்களாகிய நாம் படிக்கும் கல்லூரிகளிலோ, பணிபுரிகிற இடங்களிலோ, ஜீவ ஒளியை பிரதிபலிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய சொற்களால், செயல்களால் நாம் வெளிச்சத்தை பிரகாசிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் பிதாவிற்கு மகிமையை சேர்க்கும் வண்ணம் இருக்க வேண்டும். வெளிச்சத்தின் கிரியைகளை செய்ய எந்த விதமான தயக்கமும் இருக்கக் கூடாது. இது சற்று கடினமாய்த் தோன்றினாலும், தேவனின் துணையோடு நாம் முயன்றால், நிச்சயம் இது சாத்தியமே!

பவுல் எபேசியருக்கு இப்படியாக எழுதுகிறார். எபேசியர் 5ம் அதிகாரம் 8ம் வசனத்தில், **முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்** என்று. பிரியமானவர்களே! அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளுக்கு எதிர்த்து நின்று இருள் சூழ்ந்த இவ்வுலகத்தில் வெளிச்சமாகப் பிரகாசிக்கவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். எனவே, நாம் மதியற்றவர்களாய் இராமல், நம்முடைய அழைப்பை புரிந்து கிறிஸ்துவாகிய ஜீவ ஒளியைப் பிரதிபலிக்கிற வாழ்க்கை வாழ நாம் நம்மை ஒப்புக் கொடுப்போம். தேவன் நமக்கு உதவியாக இருப்பார். ஆமென்! ✝

---

### வாழ்க்கையில் வெற்றிப் பெறுவதற்கான ஐந்து காரியங்கள்

1. **நாளில் முதல் மணி நேரத்தை தேவனுக்குக் கொடுங்கள்**
2. **வாரத்தின் முதல் நாளை தேவனுக்குக் கொடுங்கள்**
3. **வருமானத்தின் முதல் பகுதியை தேவனுக்குக் கொடுங்கள்**
4. **முடிவுகள் எடுக்கும்போது முதலாவது முன்னுரிமை தேவனுக்குக் கொடுங்கள்**
5. **உங்கள் இருதயத்தில் முதல் இடத்தை தேவனுக்குக் கொடுங்கள்**

சிறுவர் பகுதி




**Hello** குழந்தைகளே! எப்படி இருக்கீங்க? நீங்கள் எல்லாரும் நலமாயிருப்பீர்கள் என நம்புகிறேன்.

திருமறை ஆசானில் வரும் குழந்தைகள் பகுதியைத் தவறாமல் வாசித்து பயனடைகிறீர்கள் என்று நம்புகிறேன். தேவன் நம்முடைய தவறுகளையும், பாவங்களையும் மன்னிக்க வேண்டுமானால், நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டும்.

இம்மாதம், பழைய ஏற்பாட்டிலுள்ள நோவா தாத்தா சம்பவத்தின் மூலம் உங்களுக்கு ஒன்றைச் சொல்லப் போகிறேன். [ஆதியாகமம் 5- 9 அதிகாரங்கள்]. நமக்கு ஒரு வேளை நோவா தாத்தா பற்றிய காரியங்கள் தெரிந்திருந்தாலும், இதில் அடங்கியுள்ள சில பாடங்களை நாம் ஒவ்வொருவரும் என்றென்றும் நினைவில் கொள்ளும்படி மீண்டும் கவனிக்கப் போகிறோம்.

முதலாவது, தங்களுடைய துன்மார்க்க வாழ்வினிமித்தம் ஒட்டு மொத்த உலகமும் அழிய நேர்ந்தாலும், ஒரே ஒரு குடும்பத்தை மாத்திரம் தேவன் எப்படிக் காப்பாற்றினார் என்று நான் உங்களுக்கு சொல்லப் போகிறேன். தேவன் நினைத்திருந்தால் உலகம் முழுவதையும் அழித்திருக்க முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்யாமல் தன் வார்த்தைகளுக்கு உண்மையாயிருந்த நோவாவின் குடும்பத்தை 40 நாள் பெரு வெள்ள மழையிலிருந்து பாதுகாத்தார். அவருக்குப் பிரியமாயிருந்தால் அவர் நம்மை ஒரு போதும் கைவிடமாட்டார். எச்சூழலிலும் நமக்கு ஒத்தாசை புரிவார். நமது அன்றாட வாழ்வில் தேவனுக்குப் பயந்து அவருக்கு எப்பொழுதும் உண்மையாயிருந்தால் அது போதும்.

இரண்டாவது, நோவாவின் விசுவாசம் குறித்துப் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். பேழை கட்டுவது ஒரு சாதாரண வேலை அல்ல. அங்கே நோவா கர்த்தர் என்னென்ன சொன்னாரோ அவைகளை அப்படியே விசுவாசித்து, அவர்

கட்டளையிட்டவைகளைச் செய்து முடித்தார். அது போல, சிறு பிள்ளைகளாகிய நீங்கள், கர்த்தர் எப்பொழுதும் உங்களோடிருக்கும்படி கர்த்தரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

மூன்றாவது, நோவா சம்பவத்திலிருந்து கிடைக்கும் வேறொரு பாடத்தையும் நாம் கவனிக்க வேண்டும். அவனுடைய மூன்று குமாரரும், தங்கள் தகப்பன் தங்களைச் சரியாய் நடத்துவார் என்று நம்பி தகப்பனுக்கு உதவி செய்து தகப்பன் சொன்னவைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள். நான் பேழை கட்டப் போகிறேன் எனக்கு உதவி செய்யுங்கள் என்று நம்முடைய தகப்பன்மார்கள் கேட்டால் உதவி செய்ய நம்மில் எத்தனை பேர் ஆயத்தமாக இருப்போம்? அது ஒரு சிறிய படகு அல்ல. மிகப்பெரிய கப்பல், பெரிய அளவுகளைக் கொண்டது. அதுபோல, நம்முடைய தகப்பன்மார்கள் வேதம் வாசிக்கச் சொன்னால் எத்தனை பேர் வாசிக்க ஆயத்தமாயிருப்போம்?

பிள்ளைகளே! இதைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். தேவனுக்கும், உங்கள் பெற்றோரின் நல் வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிவதை உறுதி செய்யுங்கள். அதற்கு மேலாக, அவருக்குப் பிரியமான வழியில் நடந்தால் அவர் ஒரு போதும் கைவிடமாட்டார் என்று விசுவாசியுங்கள். நீதியான வாழ்க்கையை சிறு பிராயம் முதலே வாழ ஆரம்பியுங்கள்! சரியா!

**அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.** ✝

---

## *வானம் திறக்கப்பட்ட சம்பவங்கள்*

✎ இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது திறக்கப்பட்டது (மத்தேயு 3:16).

✎ ஸ்தேவானின் மரணத்தின்போது திறக்கப்பட்டது (அப்போஸ்தலர் 7:56).

✎ பேதுரு யோப்பா பட்டணத்தில் தரிசனங்காணும்போது திறக்கப்பட்டது (அப்போஸ்தலர் 10:11)

✎ பவுல் கூறிய மனிதன் மூன்றாம் வானம் வரை எடுத்துக் கொள்ளப்பட்டபோது திறக்கப்பட்டது (II கொரிந்தியர் 12:2).

# கட்டுகளில் மட்டற்ற மகிழ்ச்சியுடன் இருப்பது எப்படி?

Bro. **பென்னி மார்ட்டின்**

**அ**ருமையான திருமறை ஆசான் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தலைப்பில் காணப்படும் வாசகத்தை வாசிக்கும் உங்களுக்கு இந்த கொரோனா காலக்கட்டத்தில் கட்டுகளைப் பற்றி எழுதுகிறாரே இவருக்கு தலைக்கு ஏதோ ஆகிவிட்டது என்று எண்ணத் தோன்றும். இங்கே கட்டுகள் என்பது ஒருவருக்கு விபத்து ஏற்படும்போதோ அல்லது கீழே விழுவதினால் ஏற்படும் காயத்திற்கு போடப்படும் கட்டுகளையோ குறிக்காது. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியர் ஒன்றாம் அதிகாரத்தில் பயன்படுத்தும் **கட்டுகள்** எனும் வார்த்தையைப் பற்றித்தான் இக்கட்டுரை அமையும். **என் கட்டுகளிலும் நான் சுவிசேஷத்திற்காக உத்தரவுச் சொல்லி அதை திடப்படுத்தி வருகிறதிலும், நீங்கள் அனைவரும் எனக்கு அளிக்கப்பட்ட கிருபையில் பங்குள்ளவர்களானதால் உங்களை என் இருதயத்தில் தரித்துக் கொண்டிருக்கிற படியினாலே, உங்களெல்லாரையுங்குறித்து நான் இப்படி நினைக்கிறது எனக்குத் தகுதியாயிருக்கிறது.** (பிலிப்பியர் 1:7). கட்டுகள் என்று பவுலால் பயன்படுத்தப்படும் பதம் இவ்வசனப்பகுதியில், அதாவது (பிலிப்பியர் 1:7-16). வசனங்களில் அவருடைய சிறை வாசத்தைக் குறிக்கிறது. பவுல் கலவரத்துக்குக் காரணமாகி, கண்முடித்தனமாக கற்களை எடுத்து எறிந்ததினால் சிறையில் அடைக்கப்படவில்லை. மனம்பதறி முறை தவறி நடந்ததால் சிறையில் அடைக்கப்படவில்லை. மாறாக, மாட்சிமையான சுவிசேஷத்தை பம்பரமாக சுழன்று பரப்புரையில் ஈடுபட்டபடியால் சிறையில் அடைக்கப்பட்டார். இன்றைய நாட்களில் பெருங்குற்றங்களில் ஈடுபடுபவர்கள் கூட சிறைச்சாலைக்கு செல்லாமல் சாலையில் காலையும், மாலையும் சுதந்திரமாக சுற்றித்திரிவதை நம்மால் பார்க்க முடிகிறது. ஆனால், பவுல் சிறைச்சாலையில் இருந்துகொண்டு தான் வியர்வை சிந்தி சம்பாதித்த பிலிப்பு பட்டணத்து சபையாரைப் பற்றி அவர் சிந்தித்தது விந்தையிலும் விந்தையாயிருக்கிறது. அதுமாத்திரமல்ல, பவுல் சிறையில் இருந்த கொண்டு ஐயோ, அநியாயமாக தன்னை சிறையில் அடைத்துவிட்டார்களே என்று முறு முறுமுறுக்கவுமில்லை, முணுமுணுக்கவுமில்லை. மாறாக,

உபத்திரவத்தின் மத்தியிலும் மற்றவர்களை மகிழ்ச்சியா யிருக்கும்படி உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார். கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் [பிலிப்பியர் 4:4], இன்று நீங்களும் நானும் சிறைசாலையில் ஒருவேளை கட்டப்பட்ட நிலையில் இல்லை என்று நிம்மதி பெருமூச்சுவிடலாம். ஆனால், வாழ்க்கையில் பொருளாதார பின்னடைவு, வியாதி, வேலை யின்மை, வேலையில் மனஉளைச்சல், சமாதான குறைச்சல் என்று பலவிதான சங்கிலிகளால் கட்டப்பட்டிருப்பதை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. பவுலால் எப்படி சங்கலிகளால் கட்டப்பட்டிருந்த நிலையிலும், மகிழ்ச்சியாக இருக்க முடிந்தது? நாமும் எப்படி வாழ்க்கைப் பிரச்சனைகளால் கட்டப்பட்ட நிலையிலும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்? வேத வசனங்களின் வெளிச்சத்தில் காண்போம்.

I **கடந்த காலத்தை நன்றி நிறைந்த இருதயத்தோடு திரும்பி பார்க்க வேண்டும்.**

பிலிப்பியர் ஒன்றாம் அதிகாரத்தில் பவுல் சிறைச்சாலையில் சிரமங்களுக்கு மத்தியிலும் தன்னால் எப்படி சிரிக்க முடிகிறது என்பதற்கான இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். பவுல் இந்த சிறைவாசத்தில் பிலிப்பு பட்டணத்து சபையாரோடு தனக்கிருந்த சகவாசத்தை நினைத்துப் பார்த்து ஏற்பட்ட நெகிழ்ச்சி அவரை மகிழ்ச்சி அடையச்செய்தது. பிலிப்பி சபையாரோடு தனக்கிருந்த பத்தாண்டு கால பசுமையான நினைவுகள் அவர் நெஞ்சத்தை விட்டு இன்னும் நீங்கவில்லை. இத்தனைக்கும் பிலிப்பி பட்டணத்தில் எல்லாம் அவருக்குப் பிரியமாகவே சாதகமாகவே நடந்தது என்று சொல்லிவிட முடியாது. அப்பட்டணத்தில் அவர் சந்தி சிரிக்க நிந்திக்கப்பட்டார் இருந்தபோதிலும் அவர் நன்மையான காரியங்களை மாத்திரம் நன்றி நிறைந்த இருதயத்தோடு நினைத்துப் பார்க்கிறார் [I தெசலோனிக்கேயர் 2:2]. தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்திலிருந்தும் இனிமையான நினைவுகளை நிறுத்துப்பார்க்கும் திறமை பவுலுக்கு மாத்திரமே உண்டு. அன்றியும் அவருடைய தீர் மானத்தின்படி அழைப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிற தென்று அறிந்திருக்கிறோம் [ரோமர் 8:28]. பவுல் தவறாக? முறை தவறி சிறையில் அடைக்கப்பட்டிருந்தாலும் கூட அதிலிருந்து விளைந்த நன்மைகளை அவர் விரும்பிப் பார்க்கிறார், திரும்பி

பார்க்கிறார். அவர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபடியால் தான் அந்த பிலிப்பிய சிறைச்சாலை அதிகாரியை ஆதாயப்படுத்த முடிந்தது (அப்போஸ்தலர் 16:16–34). அப்பட்டணத்தை விட்டு செல்லும்படி அவர் பலவந்தபடுத்தப்பட்டபடியால் தான் பல இடங்களுக்குச் சென்று பவுலால் பரிசுத்த வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. பவுல் இன்பமும், துன்பமும் கலந்த வாழ்க்கையில் இன்பமான, நன்மையான காரியங்களை நினைத்து தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தியபடியால் தான் அவரால் மகிழ்ச்சியாக வாழ முடிந்தது. நாமும் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்றால் நன்மையும், தீமையும் கலந்த இவ்வாழ்க்கை யில் நன்மையான காரியங்களைத் தெரிந்து கொண்டு தேவனை ஸ்தோத்திரிப்போம்.

## II தேவனிடத்தில் மிகுந்த நம்பிக்கையோடு நிகழ்காலத்தைப் பார்க்க வேண்டும்.

இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் அதாவது பிலிப்பியர் ஒன்றாம் அதிகாரத்தில் அவருக்கும் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கும் இடையே இருந்த பிரிக்க முடியாத அன்பை பதிவு செய்கிறார். மேலும், பிலிப்பு பட்டணத்து சபையாரிடத்தில் தேவன் தொடங்கின நற்கிரியையை தேவன் இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி தேவனை ஸ்தோத்தரிக்கிறதாக பவுல் சொல்கிறார். பிரியமானவர்களே தேவனிடத்தில் நம் நம்பிக்கையின் அளவு எப்படி இருக்கிறது? பல கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் நாம் பார்க்கும் போது தங்கள் அறிவு, திறமை, பணம் போன்றவைகளை நம்பி ஒரு காரியத்தில் இறங்கி, பெயரளவில் தேவன் மீது நம்பிக்கை வைத்து அந்தக்காரியம் நிறைவேறினால் தேவன் எங்களோடு இருப்ப தினால் தான் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களெல்லாம் எங்களுக்கு கிடைக்கிறது என்று பெருமையாகச் சொல்வார்கள். நம் சூழ்நிலைகள் சூன்யமாக இருந்தாலும் கூட தேவன் மீதான நம் நம்பிக்கை முழுமையான அளவு இருக்க வேண்டும். உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசாயா 26:3). நான் ஒன்றுமில்லை, என்னால் ஒன்றும் ஆகாது என்று தேவனுடைய பாதத்தில் நாம் சரணடையும் போது அவர் நிச்சயமாக நம்மைத் தூக்கிவிடுவார்

III **எதிர்காலத்தை ஜெபத்தோடு எதிர்நோக்க வேண்டும்.**

எப்பஜப் பார்த்தாலும் எதிர்காலம் நம் கையில் இல்லை. தேவன் காலத்தை தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். அதுவும் இந்த கொரோனா காலகட்டத்தில் எல்லோருடைய எதிர்காலமும் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. நாளைக்கு நடப்பது உங்களுக்குத்தெரியாதே; உங்கள் ஜீவன் எப்படிப் பட்டது? கொஞ்சகாலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே (யாக்கோபு 4:14). நாளையைக் குறித்த பயம் பலரை பற்றிக் கொண்டிருக்கிறதை நம்மால் பார்க்க முடிகிறது. நாளையை குறித்த கவலையும் பலரை கவ்விக் கொண்டிருக்கிறதை நம்மால் காண முடிகிறது. இது உலகத்தின் மக்களுக்கு வழக்கமான, பழக்கமான ஒன்றாக இருக்கலாம். ஆனால், எதிர்காலத்தை ஜெபத்தோடு எதிர்நோக்கும் நமக்குப் இது பொருந்தாது.

பிரியமானவர்களே, நம் எதிர்கால திட்டங்களின் வெற்றிக்கு ஜெபம் முக்கியப்பங்கு வகிக்கிறது. **நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப் படுத்துங்கள்** (பிலிப்பியர் 4:6). நம் வாழ்க்கையில் தடைகள் பல இருந்தாலும், இடைவிடாமல் ஜெபிக்கும் போது ஜெயம் நமக்கு நிச்சயம். அருமையானவர்களே, வாழ்க்கையைக் குறைகூறி, அரைகுறையாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? வாழ்க்கையில் பொருளாதார பின்னடைவு, வியாதி, வேலையின்மை, சமாதான குறைச்சல் என்று பலவிதமான சங்கிலிகளால் கட்டப்பட்டிருக் கிறீர்களா? இப்படி கட்டப்பட்ட நிலையிலும் நாம் மட்டற்ற மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றால் கடந்த காலத்தை நன்றி நிறைந்த இருதயத்தோடு திரும்பிப்பார்ப்போம், நிகழ்காலத்தை தேவனிடத்தில் மிகுந்த நம்பிக்கையோடு பார்ப்போம். எதிர்காலத்தை ஜெபத்தோடு எதிர் நோக்குவோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்! ✝

# கர்த்தருடைய நாமம்

**Bro. பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் மேலான நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும் சமாதானமும் உண்டாவதாக. நாமத்தில் என்ற வார்த்தை பெயரில் அல்லது அதிகாரத்தில் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக இயேசுவின் நாமத்தை அறிந்த அளவு கிறிஸ்தவர்கள் தேவனுடைய நாமத்தைப் பற்றி சிந்திப்ப தில்லை. எப்படி இரட்சிப்புக்கு இயேசுவின் நாமத்தைத் தவிர வேறு எதுவும் இல்லையோ (அப் 4:12) அது போல தொழுது கொள்ளுகிற விஷயத்தில் நாம் தேவனுடைய அதிகாரத்தை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது (ரோமர் 10:12, யோவே 2:32). இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய நாமத்தின் அதிகாரம், மேன்மை பற்றியும் நாம் அறிய வேண்டும். ஆண்டவர் இயேசுவும், தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாய் இருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார் என்று தொழுகை பற்றி குறிப்பிட்டுள்ளதை நாம் அறிவோம்.

நீதிமொழி 18:10 ல் **கர்த்தருடைய நாமம் பலத்த துருகம் நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்** என வாசிக்கின்றோம். இது இஸ்ரவேலருக்கு மாத்திரமல்ல, இயேசுவின் ரத்தத்தினால் நீதிமான்களாக்கப்பட்டுள்ள (ரோம 5:9) நமக்கும் பொருந்தும். அப்படிப்பட்ட தேவனுடைய நாமத்தின் மேன்மையைப்பற்றி இக்கட்டுரையில் காண தேவன் கிருபை செய்வாராக. பலத்த துருகம் என்பது பாதுகாப்பை குறிக்கிறது. தேவன் நம்மை இந்த பொல்லாத உலகிலிருந்து காக்கிற துருகமாயிருக்கிறார். சங்கீத புஸ்தகத்தில் அவருடைய நாமம் மேன்மையுள்ளது, பெரியது, உயர்ந்தது என்றெல்லாம் புகழப்பட்டுள்ளது. முதன் முதலாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு தம்மை வெளிப்படுத்தும் போது நான் உங்கள் பிதாக்களுடைய (ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு) தேவன் என்றும், இருக்கிறவராகவே **இருக்கிறேன்** என்றும் அறிமுகப்படுத்துகிறார். இந்த **இருக்கிறேன்** என்ற வார்த்தையை எபிரேய பாஷையில் **யேகோவா** என அழைக்கப்பட்டது. (யாத் 3:13 15) எற்கனவே, அபிரகாமுக்கு சர்வ வல்லமையுள்ள தேவனாக வெளிப்பட்டவர், தம் வல்லமையை இஸ்ரவேல் ஜனங்களுக்கு மட்டுமல்லாமல் உலகமெங்கும் பிரஸ்தாபம் ஆகும்படி அநேக அற்புத அடையாளங்களை செய்தார் (சங் 113:2)

இஸ்ரவேல் ஜனங்களை என் நாமம் தரிக்கப்பட்ட ஜனம் என்று சொல்லியிருக்கிறார் [உபா 28:10, 2நாளா 7:14]. இதற்கு ஒப்பாக நாம் இன்றைக்கு கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்தவர் களாய் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம் [அப்.11:26, I பேதுரு : 4:16]. தொடர்ந்து தேவன் அவருடைய நாமம் விளங்கும்படி ஓர் இடத்தை தெரிந்து கொண்டு அங்கே தமக்கு பலிகளைச் செலுத்தும்படி செய்தார் [உபா 12:11] பிற்பாடு எருச லேமை தம் நாமம் விளங்கும்படியான நகரமாக மாற்றினார். [I ராஜ 11:36] ஜனங்கள் அந்நிய தேவர்களை நாடும் போது நமது தேவ னுடைய நாமம் **எரிச்சலுள்ளவர்** என்று அறியப்படுகிறது [யாத் 34:14] ஆசாரியன் கூடாரத்தில் பிரதான ஆசாரியன் வருடத்திற்கு ஒருமுறை பிரவேசிக்கிற மஹா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள தேவ னுடைய பெட்டியின் மேல் பரலோகத்திலுள்ளதற்கு அடையாள மாக கேரூபீன் உருவம் செய்து வைக்கப்பட்டது. தாவீது இதை குறிப்பிட்டு 2 சாமு 6:2 **கேரூபீன்கள் நடுவே வாசமாயிருக்கிற சேனைகளுடைய கர்த்தரின் நாமம் எனச் சொல்லுகிறார்.**

நம்முடைய தேவன் சேனைகளின் தேவன் என்றழைக்கப்பட காரணம், அவரிடம் ஆயிரமாயிரம் தூதர் அவர் கட்டளைகளை நிறைவேற்ற ரெடியாக இருக்கிறார்கள் [எபி 1:7, வெளி 7:11] சாலமோன் தேவனுக்கென்று ஒரு ஆலயத்தைக்கட்டி ஜெபித்த போது இந்த ஆலயத்துக்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டது எனக்குறிப்பிடுகிறார். அதற்கு ஒப்பாக என் சபையை கட்டுவேன் என முன்னுரைத்த கிறிஸ்துவின் வார்த்தைப்படியே சபைக்குக் கிறிஸ்துவின் சபை என நாமம் தரிக்கப்பட்டது [I ராஜா 8:43]. தேவனுடைய நாமம் என்றைக்கும் மகிமைப்பட கடவது என்ற தாவீதின் வாக்கின் படி I நாளா 17:24ல் என்றென்றைக்கும் நிலை த்திருக்கிற தேவனுடைய வீடாகிய கிறிஸ்துவின் சபையில் தான் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச் சலாக்கினார்கள். இருந்த போதும் அவர்களை தேவன் முற்றிலும் அழிக்காத படி தம் நாமத்தினிமித்தம் கிருபை செய்தரர் [எசேக் 20:13,14].

இன்றைக்கும் நமக்காக பரிந்து பேசும் இயேசுவின் நாமத்தில் தான் நாம் தேவனிடம் கிருபையை பெற்றுக் கொள்கிறோம் [I யோவா 2:1 பழைய ஏற்பாட்டின்படி தேவனுடைய நாமத்துக்கு தூபமும், காணிக்கையும் செலுத்தப்பட்டது; [மல்டி 1:11] தூபம்

என்பது பரிசுத்தவான்களின் ஜெபங்களுக்கு அடையாளமானது. [வெளி 8:3] இப்போது நாம் இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் ஏறெடுக்கும் ஜெபங்கள் தூபவர்க்கத்தை அடையாளப் படுத்துகிறது. புதிய ஏற்பாட்டு உபதேசப்படி நாம் வாரத்தின் முதல் நாளில் நமது மனதில் நியமித்தபடி உற்சாகமாய் கொடுக்கும் போது தேவன் நம்மில் பிரியமாயிருக்கிறார் என்று காண்கிறோம் [2 கொரி 8:7 நமதாண்டவர் இயேசுவும் தேவனுடைய நாமத்தைக் கனம் பண்ணக் கற்றுக் கொடுத்தார். எப்படியெனில், ஜெபிக்கும் மாதிரியை தன் சீஷருக்கு கற்றுத்தந்த போது, பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என மேன்மைப்படுத்தினார்.

பிதாவாகிய தேவன் இயேசுவை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் யாவருடைய முழங்கால்கள் முடங்கும்படிக்கும் - பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுவுக்கு மேலான நாமத்தைத் தந்தருளினார் [பிலி 2:8-11]. இதைக்குறித்த தேவன் ஏற்கெனவே முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார் [ஏசாயா 45:23] இஸ்ரவேல் ஜனங்கள் இயேசு ஆண்டவரை நிராகரித்த போது, கர்த்தருடைய நாமத்திலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லும் காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள் என்றார் [லூக் 13:35] அதே போல் அவருடைய அற்புதங்களை கண்டவர்களும், பிசாசு மற்றும் அநேக வியாதிகள் நீங்கினதைப் பார்த்த இஸ்ரவேலர் அவர் சொல்லியிருந்தபடியே கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்தரிக்கப் பட்டவர் என்று தேவனைப் புகழ்ந்தார்கள் [லூக் 19:38]

இங்கு சொல்லப்படுகிற கர்த்தருடைய நாமத்தினாலே என்பது பிதாவாகிய தேவனைக் குறிக்கிது [சங் 118:26]. வருகிற ராஜாவாக நமதாண்டவர் இயேசு குறிப்பிடப்படுகிறார். தாவீது தன் எதிரிகளை தேவனுடைய நாமத்தினாலே வெற்றி கொண்டார் [118:11] அதே தேவனைத் தான் நாம் இன்றைக்கும் தொழுது கொள்ளுகிறோம். நாம் அவருக்கு விரோதமான காரியங்களை செய்யும் போது அவர் எரிச்சலடைகிறார். மனந்திரும்பும் போது கிருபை உள்ளவராய் இருக்கிறார். அவருடைய நாமம் விளங்கும் படி, மகிமைப்படும்படி நம்மை முன்குறித்து தெரிந்து கொண்டு ள்ளார். அந்த நாமமே நமக்கு பலத்த துருகமாயிருக்கிறது. நாம்

அதற்குள் சுகமாயிருக்கும்படியான ஆசீர்வாதம் பெற்று இருக்கிறோம். புறஜாதியாரையும் தமது நாமம் விளங்க தெரிந்து கொண்டார் (ஏசா 65:1) அதற்கு நாம் கிறிஸ்துவின் உபதேசத்தை முழுமையாக கைக்கொள்ள வேண்டும். அப்போது தான் நாம் பூமிக்க உப்பாகவும், உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்க முடியும். நம்முடைய நற்கிரியை களைக் கண்டுதான் பரலோகத் தில் இருக்கிற நம் பிதாவை மனுஷர் மகிமைப்படுத்துவார்கள் (மத்5:16) நம் விசுவாசம் பெருக வேண்டும். ஒருவரில் ஒருவர் அதிக அன்பு கூரும்படி நடந்து கொள்ளும் போது இயேசுவின் நாமம் நம்மிடத்திலும் நாம் அவரிடத்திலும் மகிமைப்படுவோம் (2தெச 1:11, 12) ஆவிக்குரிய வளர்ச்சியடையவே நமக்காக இயேசு தேவனாலே பிரதான ஆசாரியர் என்று நாமம் தரிப்பிக்கப் பட்டார். அவர் மூலம் நாம் தேவ ஆசீர்பெற்ற சுகமாயிருப்போம்) தேவக்கிருபை நம் அனைவ ரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.✝

## *நாளும் நடப்பும்*

- ☆ **இந்தியாவில் இதுவரை மூன்றுகோடி பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுளளதாக சுகாதாரத்துறை தகவல்**

- ☆ **கொரோனோ கொள்ளை நோய் மீண்டும் தமிழகத்தில் அதிகமாகப்பரவி வருகிறது. மக்கள் எச்சரிக்கை யாயிருக்கும் படி அரசு அறிவுறுத்தல்.**

- ☆ **வருகின்ற ஏப்ரல் ஆறாம் தேதி தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன.**

- ☆ **இந்தியாவில் பெட்ரோல் டீசல் விலையேற்றத்தால் எல்லாப் பொருட்களின் விலையும் கடுமையாக ஏறியுள்ளது.**

- ☆ **இந்தியா - இங்கிலாந்து இடையேயான இருபது ஓவர் கிரிக்கெட் போட்டிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.**

# *பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்*

**Bro. K.M. பிலிப்**

**அ**ன்புள்ள தேவ பிள்ளைகளே! இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மக்களுக்கு இன்றைக்கு பிரச்சனையே நோயும் பேயும் தான். நோய் மனிதனுடைய சரீரத்தைத் தாக்கி பெலவீனப்படுத்துகிறது. அன்று முதல் இன்று வரை நோயின் கொடூர தாக்கத்தில் மனிதன் சிக்கித்தவிக்கிறான். அவன் மாமிசம் அவனில் இருக்குமளவும் அதற்கு நோவு இருக்கும். (யோபு 14:22) என்ற உண்மையை யோபு சொல்லியிருக்கிறார். இதற்குத் தீர்வாக பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே என்று (மத் 9:12)நம் நாதர் இயேசு வழிகாட்டியிருக்கிறார்.

**அப்படியென்றால் பேயைக் குறித்து என்ன?**

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபே 6:12). ஆம், பேயின் தாக்கம் அழிந்து போகிற சரீரத்தையல்ல, நித்தியமான ஆத்துமாவைத் தாக்கி நித்தியத்தை இழக்கச் செய்கிறான். ஆன்மீகத்தைக் கெடுத்து தேவனை விட்டு பிரிந்து விடுகிறான். உலகம் முழுவதும் ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி, ஆபாசத்தை கலை என்ற பெயரில் மனதைக் கொள்ளையிடுகிறான். விபச்சாரம் ஒரு அங்கீகாரம் பெற்ற வியாபாரமாக வலையை விரித்தான். மதுபானம் ஒரு காலத்தில் ஒதுக்குப்புறமாக ஒளிந்து கொண்டு, குற்ற உணர்வுடன் குடித்த நிலைமாறி குடித்தால் தான் நாட்டின் குடிமகன் என்றளவில் அரசே அடையாளப்பலகை வைத்து அழைப்பு கொடுக்கிறது என்றால் பேயின் பேரழிவு எவ்வளவு பெருகியிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்தித்திப்பை கசப்புமென்று சாதிக்கிறவர் களுக்கு ஐயோ! என்று ஏசாயா அன்றே இன்றைய நடை முறையை 5:20) சுட்டிக்காட்டி எச்சரித்திருக்கிறார். இது பிசாசின் (பேயின்) வேலை. உலகம் உள்ளளவும் அவன் கிரியை ஓயாது. தேவ பிள்ளைகளுக்கு

எதிராகப் போராடிக் கொண்டேதான் இருப்பான். அப்படியென்றால் இதற்குத் தீர்வு தான் என்ன? ஆகையால், 1. தேவனுக்குக் கீழ்ப் படிந்திருங்கள்; 2. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் [யாக் 1:7]. ஆம், கீழ்படிவதில் தேவனுக்கு நல்லவர்களாகவும், எதிர்த்து நிற்பதில் பிசாசுக்கு முன் வல்லவர்களாகவும் திகழ வேண்டும். பிசாசுக்கு எதிர்த்து நிற்காமல் வெற்றி இல்லை. எதிர்த்து நின்றால் ஓடிப்போவான்.

எதிரியை எதிர்க்க, எதிரியின் பலத்தையும், பெலவீனத்தையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். இந்த அடிப்படையில் தான் இந்திய இராணுவம் 24 மணி நேரமும் விழிப்புடன் தயார் நிலையில் நின்று கொண்டிருக்கிறது. பிரச்சனை வந்த பிறகல்ல வருமுன் காப்பதே இராணுவத்தின் பலம். பிசாசுக்குக்கெதிராய் நம் நிலையும் இதுவே. ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான் என்று [I பே 5:8] வேதம் எச்சரிக்கிறது. இப்படிச் சொல்வதால் பயப்பட வேண்டிய அவசியமில்லை. அவன் வேட்டையாடும் வேங்கை அல்ல. நின்ற இடத்தில் கெர்ச்சிப்பான். இதில் பயந்து நடுங்கி சிங்கத்தின் முன்பாக தானாகவே ஓடி வரும் மிருகங்களை பிடித்துக் கொள்ளும். இப்படி பயந்து நடுங்கி திகைத்து நிற்கும் நிலையில் பிடிப்பது, வீழ்த்துவது வீரமா? அவன் பெலசாலியா? விவசாயி தூங்கும் போது, கோதுமைக் களைகளை விதைக்கிற கோழை [மத் 13:26] பெலவீனமுள்ளவர்களிடம் தான் தன் வஞ்சக வலையை வீசுவான். ஆதாமிடம் அல்ல. பெலவீனபாண்டம் ஏவாளிடமே தன் பலத்தை காட்டினான். யோசேப்போ அடிமையாயிருந்தாலும், பிசாசுக்கு அடிபணியாமல் எதிர்த்து நின்று விரட்டியடித்தான். அன்பானவர்களே! இப்படிப்பட்ட பெல வீனரான பிசாசைக் கண்டு பயப்படலாமா? ஆனால், எச்சரிக்கை யாய், தெளிந்த புத்தியுள்ளவர்களாய், விழிப்புடனிருந்து எதிர்த்து நிற்க வேண்டும்.

**மேலும் பிசாசைக் குறித்து :** அவன் குற்றம் சுமத்துகிறவன் [வெளி 12:10], தேவனால் உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன் [யோபு 1:1] என்று நற்சாட்சி பெற்ற யோபுவின் மீதே, அவரது நண்பர்களைக் கொண்டு யோபு பாவி என்று குற்றம் சுமத்தினான். [யோபு 34:37,7 8]. ஆனாலும் யோபு திடனற்றுப் போகாமல் சுமித்திரையான தராசிலே தேவன் என்னை நிறுத்து,

என் உத்தமத்தை அறிவாராக (யோபு 31:6) என்று தன்னம்பிக்கையோடு திட்டமாய் கூறினார். பிசாசு ஓடிப் போனான். நீங்கள் குற்றமற்றவர்களாயிருந்தும், பிசாசு உங்களைப் குற்றப்படுத்தினால், நீதியை அறிந்தவர்களே, என் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிறவர்களே, எனக்குச் செவிகொடுங்கள். மனுஷரின் நிந்தனக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருங்கள் (ஏசா 51:7) என்ற தேவ வார்த்தை நம்மை நிலை நிறுத்தும்.

**பிசாசானவன் மனுஷ கொலைபாதகன் :** (யோ 8:44). யோசுவாவின் நாட்களில் பிசாசானவன் ஆகான் என்பவனை சாபத்தீடான பொருட்களை இச்சித்து எடுத்து மறைத்து வைக்கச் செய்ததால் போருக்குச் சென்றதில் 36 பேரையும், ஆகானையும் அவன் குடும்பத்தாரையும் கொலை செய்த கொலை பாதகன். (யோசு 7:1 –26).

**அவன் பொய்யன் :** (யோவான் 8:44). அழிந்து போகிற அற்ப ஆஸ்திக்காக அனனியா, சப்பிராள் இருவரையும் தேவ சமூகத்தில் துணிகரமாய் பொய் பேச வைத்து இருவர் உயிரையும் ஒரே நாளில் பறி கொடுக்கச் செய்த பொய்யான். (அப் 5:1–11). இப்படி பொல்லாங்கனும், பொய்யனும், கொலைபாதகனும், சூதும், வஞ்சகமும், தந்திரசாலியுமான இவனிடத்தில் உறவு வைத்துக் கொள்ளலாமா? பிசாசிடம் நன்மையை எதிர்பார்க்கலாமா? இயேசுவோடு இருந்த யூதாஸ் சாத்தானோடு உறவு கொள்ளத் தன் இருதயத்தை திறந்து வைத்தான். யூதாசுகுள் சாத்தான் புகுந்தான் (லூ22:3) யூதாஸ் இச்சித்த 30 வெள்ளிக்காசைக் கொடுத்தான். யூதாஸ் இதை நன்மை என்று நினைத்தான் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். யூதாஸ் மூலம் பிசாசு எதிர்பார்த்த வேளை முடிந்தது. இப்பொழுது கொலை பாதகன் தன் சுயரூபத்தைக் காட்டுகிறான். எந்த 30 காசை நன்மை என்று இச்சித்து பெற்றுக் கொண்டானோ, அதன் மீதே யூதாஸ்க்கு வெறுப்பை உண்டாக்கி காசை வீசி எறிந்து விட்டு நான்று கொண்டு சாகும்படி செய்தான். ஆம் பிசாசிடமிருந்து ஒரு போதும் ஒரு நன்மையையும் எதிர்பார்க்க முடியாது ; எதிர்பார்க்கவும் கூடாது.


பிரியமானவர்களே! நேர்மையான எதிரி நேருக்கு நேர் மோதுவான் கோலியாத்தைப்போல், அதை நாமும் சந்திக்க முடியும். தாவீதைப்போல். ஆனால், சூது நிறைந்த சாத்தானை எதிர்ப்பதில் நாம்தான் விழிப்புடன் இருக்க வேண்டும். சர்ப்பம்


என்னை வஞ்சித்தது. நான் புசித்தேன் என்று சாக்கு போக்குச் சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாது. அன்று பரலோகத்தை இழக்கும் சூழலில் சாத்தானைக் குற்றம் சாட்டி நாம் பரலோக த்தைப் பெற முடியாது. ஆகவே, ஒன்று செய்வோம். பின்னான வைகளை மறந்து முன்னானவைகளை நாடி இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருவோம். (பிலி 3:13,14) பிசாசை அசட்டை செய்வோம்.


நம் பெலவீனங்கள் சிலவற்றை பார்ப்போம். சாத்தானின் சோதனைகளைக் கண்டு பயப்படுவது நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளும் தாழ்வு மனப்பான்மை. இது தோல்வியையே கொடுக்கும். 40 நாட்களானாலும் சவுலின் சேனை கோலியாத்தை எதிர்கொள்ளவே முடியவில்லை. ஆனால், யுத்தம் கர்த்தருடை யது; கர்த்தர் என்னைத் தப்புவிப்பார்; கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்திலே வருகிறேன் என்று அங்கேயே அப்பொழுதே எதிரியை வீழ்த்திய தாவீதைப் போல சோதனைகளைக் உடனுக் குடன் சந்திக்க வேண்டும். இயேசு பிசாசை சத்திய வார்த்தையால் உடனுக்குடன் சந்தித்ததால் பிசாசானவன் அவரை விட்டு விலகிப் போனாள் (மத் 4:11). இதுவே நம் வாழ்க்கையிலும் உண்மையாயிருக்கட்டும். கால தாமதம் பெலவீனத்திற்கு வழி வகுக்கும். பரீட்சையை சந்திக்கிற மாணவனின் எதிர்காலமே பிரகாசமாயிருக்கும்.


II – நான் இரட்சிக்கப்பட்டும் பாவம் செய்கிறேன். பரிசுத்தமாய் வாழவே முடியாது என்ற தப்பான எண்ணத்தை பிசாசு தனக்குச் சாதகமாக்கி நம்மை அடிமையாக்கி விடுவான். இதுதான் யூதாஸின் நிலை; குற்றமற்ற இரத்தத்தை காட்டிக் கொடுத்து பாவம் செய்த எனக்கு மன்னிப்பே இல்லை என்ற தவறான முடிவே யூதாசைத் தற்கொலைக்குத் தூண்டியது. மாறாக, ஏழு முறையல்ல, ஏழெழுபது முறை மன்னிக்க வேண்டும் என்று போதித்தவர்; சகேயு போன்ற பாவிகளை மன்னித்து ஏற்றுக் கொண்டவர் என்னை ஒரு முறை மன்னிக்க மாட்டாரா? என்று சிந்தித் திருந்தால் சீர்பொருந்தியிருப்பான். இதைத்தான் மூன்று முறை மறுதலித்த பேதுரு செய்தார்; இயேசுவின் கண்களில் இரக்கம் பெற்றார். பரலோக ராஜ்ஜியத்தின் திறவு கோலைப் பெற்றார். ஆம், நாம் நீதிமான்கள்; நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான் (நீ 24:16) என்ற வார்த்தையில் தைரியப்படுவோம், நிமிர்ந்து நிற்போம், பிசாசு ஓடிப்போவான். ஆமென்! ✝


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.













# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm


Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month


# எங்களது இதர வெளியீடுகள்




















சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.